**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.VII, கோயமுத்தூர்.**

**முன்னிலை:** திரு.K. இந்திரஜித்.,பி.ஏ.,எம்.எல்.,

நீதித்துறை நடுவர் எண். VII, கோயமுத்தூர்.

**குற்றப் பல்வகை மனு எண்: 10476/2025**

**in**

**குற்ற எண். 68/2024**

**CNR No.TNCB0A-025950-2025**

**2025 ம் வருடம் அக்டோபர் மாதம் 22 ம் நாள் புதன்கிழமை**

1) சந்தியா சதீஷ் பட்டாவியா(70)
 க/பெ. சதீஷ் வீர்சந்த் பட்டாவியா
2) சதீஷ் வீர்சந்த் பட்டாவியா(72)
 த/பெ. சதீஷ் வீர்சந்த் ... மனுதாரர் / 1,2 ம் எதிரிகள்

**/எதிர்/**

**அரசுக்காக.**
காவல் ஆய்வாளர்,
கோவை மாநகர குற்றப்பிரிவு காவல் நிலையம்,
கோயம்புத்தூர்.
குற்ற எண்.68/2024
ச/பி. 406, 420, 120B இதச ... எதிர்மனுதாரர் / புகார்தாரர்

**உத்தரவு**

1. இவ்வழக்கின் எதிரிகள் / மனுதாரர்கள் தரப்பில் வெளிநாடு செல்ல அனுமதி வேண்டி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 406, 420, 120B இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

"மேற்படி எதிரிகள் வெளிநாடு செல்வதற்கு முன்பு விசாரணை நீதிமன்றத்தின் முன் அனுமதியைப் பெற வேண்டும் என்றும் மற்றும் அவர்கள் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்ததும் தங்கள் பாஸ்போர்ட்டை கனம் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் சென்னை மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது."

3. மனுவில் சமர்பிக்கப்பட்டது யாதெனில், மேற்படி வழக்கில் வழக்கறிஞர் மனுதாரர்கள் / 1, 2 ம் எதிரிகளுக்கு இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து, CRLMP No.10153/2025 என்ற மனுவில் உள்ள உத்தரவுப்படி "மனுதாரர்கள் தரப்பில் மருத்துவப்பரிசோதனை மற்றும் சிகிச்சைகளுக்காக செல்ல வேண்டியிருப்பதாக கூறியுள்ளதை கருத்திற்கொண்டு இந்நீதிமன்றம் மேற்படி மனுதாரர்கள் 25.10.2025 முதல் 25.02.2026 வரை மட்டும் வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதித்தது" என்றும், அதில்

மேற்படி மனுதாரர்கள்/ எதிரிகள் வெளிநாடு செல்வதற்கு அவர்கள் செல்லும் தேதியிலிருந்து 4 மாதங்களுக்கு என தேதியை மாற்றம் செய்யக் கோரியும், மேற்படி “1 வது நிபந்தனையான மனுதாரர்கள் / எதிரிகள் தங்களுக்காக இரு நபர்கள் பிணையிலும் ரூ.10,000/- த்திற்கு பிணைப்பத்திரம் எழுதித் தர வேண்டும்" என்ற நிபந்தனையில் மனுதாரர்கள்/ எதிரிகள் இரு நபர்கள் பிணையதாரர் இல்லாத காரணத்தினால் ஒரு நபர் மட்டும் பிணைப்பத்திரம் எழுதித் தர வேண்டும் என்று நிபந்தனை மாற்றம் செய்து தளர்வு செய்து உத்தரவிடுமாறும் தங்களது மனுவில் வேண்டி சமர்ப்பித்துள்ளார்கள்.

4. எதிர்மனுதாரர் மற்றும் அரசு தரப்பில் வாதி எதிரிகளுடன் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி இந்த வழக்கு தொடர்பாக கோவை சமரச தீர்வு மையத்தில் 27.11.2024 ம் தேதியன்று வாதி மற்றும் எதிரிகள் ஆகிய இரு தரப்பினரும் ஆஜராகி தங்கள் பிரச்சனைக்கு தீர்வு காண அறிவுறுத்தி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி இவ்வழக்கின் எதிரிகள் இரண்டு முறை சமரச தீர்வு மையத்தின் விசாரணைக்கு ஆஜராகியும் இவ்வழக்கில் எந்த சமரசமும் ஏற்படவில்லை என்பதும் தெரிய வருகிறது. இந்நிலையில் இவ்வழக்கின் எதிரிகளை கடந்த 19.02.2025 ம் தேதி விசாரணைக்கு ஆஜராக அறிவுறுத்தி சம்மன் சார்பு செய்யப்பட்டதின் பேரில் விசாரணைக்கு ஆஜரான எதிரிகள் புலன் விசாரணைக்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பித்தும் வழக்கு விசாரணைக்கு அழைக்கும் போது ஆஜராவதாகவும் உறுதியளித்து சென்ற எதிரிகள், வெளிநாட்டிற்கு செல்ல முயற்சித்து வருவது இமிக்ரேஷன் அதிகாரிகள் அனுப்பிய இமெயில் தகவல் மூலம் தெரிய வந்துள்ளது என்றும் சமர்ப்பித்துள்ளார்கள்.

5. மேற்படி எதிரிகள் அமெரிக்கா குடியுரிமை பெற்றுள்ளார்கள் என்பதாலும், மேலும் இவர்களுக்கு தமிழ்நாட்டிலோ இந்தியாவிலோ நிரந்தர இருப்பிடம் இல்லை என்பதாலும் இந்நிலையில் எதிரிகள் வெளிநாட்டிற்கு செல்ல வேண்டி மாண்புமிகு நீதிமன்றத்தில் வழக்கில் கண்ட CMP யின் படி மனுதாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே எதிரிகளுக்கு வெளிநாட்டிற்கு செல்ல அனுமதி வழங்கினால் வழக்கு விசாரணைக்கு ஆஜராகமாட்டார்கள் என்றும், எதிரிகள் வெளிநாட்டிற்கு செல்ல அனுமதி வழங்க கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு பதிலுரையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

6. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்களின் பரிசீலனையின் படி இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்த CRLMP No.10153/2025 என்ற மனுவில் உள்ள உத்தரவுப்படி மனுதாரர்கள் தரப்பில் மருத்துவப்பரிசோதனை மற்றும் சிகிச்சைகளுக்காக செல்ல வேண்டியிருப்பதாக கூறியுள்ளதை கருத்திற்கொண்டும், மேற்படி மனுதாரர்கள் 25.10.2025 முதல் 25.02.2026 வரை மட்டும் வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதித்து உத்தரவிடப்பட்டதை நிபந்தனை மாற்றம் செய்ய முடியாது என்றும், மேற்படி உத்தரவில்

உள்ள “1 வது நிபந்தனையான மனுதாரர்கள் / எதிரிகள் தங்களுக்காக இரு நபர்கள் பிணையிலும் ரூ.10,000/- த்திற்கு பிணைப்பத்திரம் எழுதித் தர வேண்டும்" என்ற நிபந்தனையில் மனுதாரர்கள்/ எதிரிகள் இரு நபர்கள் பிணையதாரர் இல்லாத காரணத்தினால் ஒரு நபர் மட்டும் பிணைப்பத்திரம் எழுதித் தர வேண்டும் என்று நிபந்தனை மாற்றம் செய்ய வேண்டி குறிப்பிட்டுள்ளதை கருத்திற்கொண்டு, மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று **"மனுதாரர்கள் / எதிரிகள் தங்களுக்காக ஒரு நபர் பிணையிலும் ரூ. 10,000/- த்திற்கு பிணைப்பத்திரம் எழுதித் தர வேண்டும்"** என்ற நிபந்தனையை மட்டும் தளர்வு மாற்றம் செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மேற்படி மனுதாரர்கள் / எதிரிகள் 25.10.2025 ம் தேதி முதல் 25.02.2026 ம் தேதி வரை மட்டும் வெளிநாடு செல்ல அனுமதி வழங்கியும், மேற்படி வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்த பிறகு மனுதாரர்கள் தங்களது கடவுச்சீட்டுக்களை இந்த நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்ற உத்தரவுடன் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

*இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2025 ம் வருடம் அக்டோபர் மாதம் 27 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.*

(ஒப்பம்/-K.இந்திரஜித்),
நீதித்துறை நடுவர் எண்.VII,
கோயம்புத்தூர்.